## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை

## அசல் வழக்கு எண். 101/2022

PW2 – திரு. ரகுமான்ஷா நாள். 13.06.2024

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Head clerk (தலைமை எழுத்தர்) திருமதி.S.சோமா என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**10 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வாதி சாட்சியம் அளிக்க அழைத்ததன் பேரில் நீதிமன்றம் வந்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு எனது ஊரில் எவ்வளவு சொத்துககள் உள்ளது மற்றும் அதன் சர்வே எண்கள் என்னவென்றால் எனக்கு 3 ஏக்கர் உள்ளது அதன் சர்வே எண் தெரியாது. தாவா சொத்தின் வருவாய் ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என நான் பார்க்கவில்லை என்றால் சரிதான், எனக்கு தாவா சொத்து பற்றி விவரங்கள் தெரியும். முகம்மது ராவுத்தர் என்ற மம்மது என்று ஏதேனும் ஆவணங்கள் பார்த்துள்ளேன் என்றால் பார்த்ததில்லை, எனக்கு அவரது பெயர் முகம்மது ராவுத்தர் என்ற மம்மது என்று தெரியும்.

2. வாதி மற்றும் 1 முதல் 9 பிரதிவாதிகளின் மூதாதையர் பெயர் முகம்மது ராவுத்தர் என்ற மம்மது இல்லை என்றும், முகம்மது ராவுத்தர் என்ற மம்மது என வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முகம்மது ராவுத்தர் மற்றும் சேது என்ற சேதுராமன் ஆகியோர்கள் பெயரில் தாவா சொத்திற்கான வருவாய் ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால்

பார்த்ததில்லை, அவர்கள் பெயரில் பட்டா எண்.757 என தாவா சொத்துக்கு தாக்கலாகி உள்ளது. வாதி யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் இவ்வழக்கை பற்றிய விவரம் எனக்கு தெரியாது. முகம்மது ராவுத்தர் மற்றும் சேது என்ற சேதுராமன் ஆகியோர்கள் கூட்டாக அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. எனது ஊரைச்சார்ந்த சுப்பிரமணியன் என்பவர் இறந்து விட்டார் என்றால் சரிதான். மேற்படி சுப்பிரமணியனின் பேத்தி கற்பகம் என்றால் அதைப்பற்றி தெரியாது. சுப்பிரமணியன் உயிருடன் இருக்கும் போது செய்யது, ராவுத்தர் மற்றும் சேக்முகம்மது ஆகியோர்கள் அவர் மீது வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் அதைப்பற்றி தெரியாது. எனது மனைவி பெயர் என்னவென்றால் சபியா பீவி. இவ்வழக்கு என் மனைவி மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இன்று தான் தெரியும். வாதி என்னிடம் என் மனைவி மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரத்தை என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் நீதிமன்றத்திற்கு வரும் விவரம் என் மனைவிக்கு தெரியுமா என்றால் தெரியும். 02.11.1963 அன்று சுப்பிரமணி அப்துல் காதர் என்பவரிடம் தாவா சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல, அப்துல் காதர் என்ற ஒரு நபர் இல்லை.

4. 1, 5 பிரதிவாதிகள் மற்றும் ராவுத்தர் ஆகியோர்கள் சுப்பிரமணியன் மீது இந்நீதிமன்றத்தில் வழக்கு எண் 15/2012 என்ற வழக்கில் சுப்பிரமணியன் அப்துல் காதரிடம் இருந்து வாங்கிய கிரையப்பத்திரம் ஊர்ஜிதம் செய்யப்பட்டு சுப்பிரமணியனுக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் அதைப்பற்றி தெரியாது. மேற்படி தீர்ப்பின் மேல் செய்யப்பட்ட மேல் முறையீடு எண்.41/2019 தள்ளுபடி கெய்யப்பட்டது என்றும், மேற்படி வழக்கு விவரங்கள் எனக்கு நன்கு தெரியும்என்றும், தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சுப்பிரமணியன் இறந்த பிறகு அவரது வாரிசான 10ம் பிரதிவாதி தான்

அனுபவம் செய்து வருகிறார் என்றால் அதைப்பற்றி தெரியாது. வாதிக்கும் 1 முதல் 9 பிரதிவாதிகளும் தாவா சொத்தை கூட்டனுபவம் செய்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் வாதி சொல்லிய விவரங்களை தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

(ஒம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை